Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்புப் பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், செப்டம்பர் 24, 2024 | இதழ் 164

# அண்ணா பிறந்த மண்ணில் பவள விழாவைக் கொள்கைக் கூட்டணியுடன் கொண்டாடுவோம்!

## தி மு க தலைவர் மு க ஸ்டாலின்

சென்னை, 24 செப் 2024: நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் பவள விழா அழைப்பு மடல்.

முப்பெரும் விழா எனும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருவிழாவை அதன் பவள விழா நிறைவாகக் கடந்த செப்டம்பர் 17-ஆம் நாள் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில், நம் உயிர்நிகர் தலைவராம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தகவல் தொழில்நுட்ப அறிவியலின் கற்பனைக்கெட்டாத புரட்சியான செயற்கை நுண்ணறிவுத் திறன் மூலம் வாழ்த்து தெரிவித்துத் தொடங்கி வைக்க, அவருடைய உடன்பிறப்புகளாம் நாம் அனைவரும் உற்சாக முழக்கம் எழுப்பி, எழுச்சியுடன் கொண்டாடி மகிழ்ந்த நிலையில், இந்தப் பேரியக்கத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணாவை நமக்குத் தந்த காஞ்சி மண்ணில் மற்றொரு விழாவுக்கு உடன்பிறப்புகளாம் உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் மிகச் சிறப்பான முறையிலே நந்தனத்தில் பவள விழா நிறைவ நடத்தியபோது, அதில் கழக முன்னோடிகளுக்குப் பெரியார், அண்ணா, கலைஞர், பாவேந்தர், பேராசிரியர் அவர்கள் பெயரிலான விருதுகளுடன், இந்த ஆண்டு முதன்முதலாகத் தொடங்கி வைக்கப்பட்டுள்ள - உங்களில் ஒருவனான என் பெயரிலான விருதும் காசோலையும் வழங்கிச் சிறப்பிக்கப்பபட்டது. அதுமட்டுமின்றி, கழகப் பணியில் சிறப்பாக செயல்பட்ட நிர்வாகிகளை மண்டலவாரியாகத் தேர்ந்தெடுத்து விருதுகளை வழங்கினோம். கழகத்தின் பொதுச் செயலாளர், பொருளாளர், முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் ஆகியோர் நம் இலட்சியப் பயணம் குறித்தும், இந்த இயக்கத்திற்காகப் பாடுபட்டு விருதுகளைப் பெற்ற இலட்சிய வீரர்கள் குறித்தும் உரையாற்றினார்கள். அதன் பின் கழகத் தலைவர் என்ற பொறுப்புடன், உங்களில் ஒருவனான நான் பவள விழா சிறப்புரையாற்றினேன்.

பேரறிஞர் அண்ணா எந்த இலட்சியத்திற்காக இந்த இயக்கத்தைத் தொடங்கினாரோ, முத்தமிழறிஞர் கலைஞர் எத்தனை அரும்பாடுபட்டு இந்த இயக்கத்தைக் கட்டிக்காத்தாரோ அந்த இலட்சியத்தை அடைவதற்கும், இந்தியாவின் பன்முகத்தன்மை கொண்ட ஜனநாயக நெறிமுறைகளைக் காப்பதற்கும் தொடர்ந்து தொண்டாற்றி வரும் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் ஒரு நூற்றாண்டு காலத்திற்குத் தன் பயணத்தை வலிவுடன் தொடர்ந்திட நாம் பயணிக்க வேண்டிய பாதையைப் பவள விழாவில் சுட்டிக்காட்டிப் பேசினேன்.



தமிழ் ஸ்ரீ தமிழர் - தமிழ்நாடு என்று திராவிட முன்னேற்றக் கழகம் முழக்கத்தை வைத்தபோது, அது குறுகிய கண்ணோட்டம் என்று கருதியவர்கள் உண்டு. ஆனால் இன்று மொழி ஸ்ரீ இனம் - மாநில உரிமை என்று அந்த முழக்கம் விரிவான பொருளைத் தருவதுடன், தமிழைப் போல இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மொழியும், தமிழரைப் போல இந்தியாவில் வாழும் ஒவ்வொரு இனமும், தமிழ்நாட்டைப் போல இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் தங்களின் உரிமைகளை நிலைநாட்டுவதே பன்முகத்தன்மையும் மதநல்லிணக்கமும் கொண்ட ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் என்பதை அனைத்து மாநில மக்களும் உணர்ந்திருக்கிறார்கள். இதுதான் 75 ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்திய அளவிலான தாக்கம்.

இதனை எடுத்துச் சொல்ல ஒரு பவள விழா போதாது. திசையெங்கும் விழா எடுக்க வேண்டும். நம் கழகத்துடன் இணைந்து கொள்கைக் கூட்டணி அமைத்துள்ள இயக்கத்தினரையும் இணைத்து விழா எடுக்க வேண்டும் என்பதால்தான் செப்டம்பர் 28-ஆம் நாள், பேரறிஞர் பெருந்தகை பிறந்த காஞ்சி மண்ணில் பவள விழா கொண்டாடப்படுகிறது. சென்னை நந்தனம் விழா நம் குடும்ப விழா என்பதால் கழகத்தினருக்கு முழுமையான நேரம் ஒதுக்கப்பட்டது. காஞ்சியில் நடப்பது கொள்கை உறவுகளுடனான திருவிழா. இங்கே தோழமைக் கட்சியினர் அனைவரும் பங்கேற்றுச் சிறப்பிக்க இருக்கிறார்கள்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திரு. க.சுந்தர் எம்.எல்.ஏ., அவர்களும் அண்ணா பிறந்த மண்ணில் பவள விழாப் பொதுக்கூட்டத்திற்குச் சிறப்பான ஏற்பாடுகளை இரவு - பகல் பாராது மேற்கொண்டு வருகிறார்கள். பேரறிஞர் அண்ணாவிடமும் தலைவர் கலைஞரிடமும் கொள்கைப் பாடம் பயின்ற மொழிப்போர்க் கள வீரர் - கழகத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிற பவள விழாவில் தாய்க்கழகமாம் திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் அய்யா கி. வீரமணி அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., அவர்கள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணன் வைகோ எம்.பி., அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன் அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தோழர் இரா. முத்தரசன் அவர்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் அவர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் சகோதரர் தொல். திருமாவளவன் எம்.பி., அவர்கள், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா அவர்கள், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் சகோதரர் கமல்ஹாசன் அவர்கள், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் எம்.எல்.ஏ., அவர்கள், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் திரு. தி. வேல்முருகன் எம்.எல்.ஏ., அவர்கள், நம் கழகத்துடன் தோழமை உறவு கொண்டுள்ள திரு. ஜி.எம். ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள், திரு. எர்ணாவூர் நாராயணன் அவர்கள், திரு. முருகவேல்ராஜன் அவர்கள், திரு. தமீமுன் அன்சாரி அவர்கள், திரு. அதியமான் அவர்கள், திரு. திருப்பூர் அல்தாப் அவர்கள், திரு. பி.என். அம்மாவாசி அவர்கள் உள்ளிட்டோர் கழகப் பவள விழாக் கூட்டத்தில் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பிக்க இருக்கிறார்கள். உங்களில் ஒருவனான நான் சிறப்புரை ஆற்றவிருக்கிறேன்.

காஞ்சி மண்ணில் நடைபெறும் கழகப் பவள விழா ஏற்பாடுகள் குறித்து ஒவ்வொரு நாளும் தவறாமல் கேட்டறிந்து வருகிறேன். 'மக்களிடம் செல்' என்று கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா சொன்னதைக் கட்டளையாக ஏற்று திராவிட மாடல் அரசு மக்களுக்கான பணிகளைத் தொய்வின்றித் தொடர்ந்து வருகிறது. அதனால் அரசு சார்பிலான திட்டங்களைத் தொடங்கி வைக்கும் நிகழ்வுகள், ஆய்வுப் பணிகள் எனத் தொடர்ச்சியான செயல்பாடுகளுக்கு ஓய்வில்லை.

அமெரிக்காவிற்கு மேற்கொண்ட பயணத்தின் மூலமாகத் தமிழ்நாட்டுக்கு கிடைத்துள்ள முதலீடுகள் குறித்தும், அதனால் தமிழ்நாட்டில் ஏற்படவிருக்கும் பரவலான தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்தும், அமெரிக்கா வாழ் தமிழர்கள் பொழிந்த அன்பு மழை குறித்தும் அமெரிக்கப் பயணச் சிறகுகள் என்ற தலைப்பில் உடன்பிறப்புகளாம் உங்களுக்கு உங்களில் ஒருவனான நான் கடிதம் எழுதினேன். அந்தப் பயணத்தின் அடுத்த பகுதியை உங்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு ஓய்வின்றிப் பணிகள் தொடர்கின்றன. விரைவில் அதனைப் பகிர்ந்து கொள்வேன்.

மாநில உரிமைகளை மறுக்கும் ஒன்றிய அரசுடன் நமக்கான ஒவ்வொரு உரிமைக்காகவும் போராடித்தான் ஆக வேண்டியுள்ளது. போராட்டமே கழகத்தின் வலிமை. ஆட்சியதிகாரம் இருந்தாலும் உரிமைக்கான போராட்டத்தைத் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறோம். தமிழ்நாட்டின் திட்டங்களுக்கான நிதி கோரி செப்டம்பர் 26, 27 ஆகிய நாட்களில் டெல்லிக்குப் பயணம் மேற்கொண்டு இந்திய ஒன்றியத்தின் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை நேரில் சந்தித்து, தமிழ்நாட்டுக்கான திட்டங்களை நிறைவேற்றிட ஒன்றிய அரசு தர வேண்டிய நிதியை வலியுறுத்திப் பெறவிருக்கிறேன்.

செப்டம்பர் 28-ஆம் தேதி காலையில் ராணிப்பேட்டை மாவட்டம் பணப்பாக்கத்தில் உள்ள தொழிற்பேட்டையில் 9 ஆயிரம் கோடி ரூபாயில், 400 ஏக்கர் பரப்பளவில் அமையவிருக்கும் டாடா மோட்டார் நிறுவனத்தின் ஜாகுவார், லேண்ட்ரோவர் கார் உற்பத்தித் தொழிற்சாலைக்கு டாடா நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு. சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையில் அடிக்கல் நாட்டவிருக்கிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் திராவிட மாடல் அரசின் கொள்கைகள் இன்று இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் வகையில் அமைந்துள்ள நிலையில், ராணிப்பேட்டை நிகழ்வினை முடித்துக்கொண்டு, தமிழ்நாடு என்று நம் மாநிலத்திற்குப் பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் காஞ்சிக்கு வருகிறேன். நான் மட்டுமல்ல, நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளான உங்கள் அனைவரையும் வாஞ்சையோடு அழைக்கிறது காஞ்சி. அண்ணா பிறந்த மண்ணில் அணிவகுப்போம்! கொள்கைத் தோழமைகளுடன் எழுச்சியுடன் கொண்டாடுவோம் கழகத்தின் பவள விழாவை!




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது சென்னையில் விடியவிடிய கனமழை

சென்னை, 24 செப் 2024: வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆந்திரம் மற்றும் ஒடிசாவுக்கு இடைப்பட்ட மத்திய வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவி வந்தது. இதன் காரணமாக வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது. இதனால் ஆந்திரம், தெலுங்கானா, ஒடிசா ஆகிய மாநிலங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மேலும் தரைக்காற்று ஓரிரு இடங்களில் மணிக்கு 30 40 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.

மேலும், கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும்.

30 ந்தேதி வரை தமிழகத்தில் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையைப் பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 28 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும் இடையிடையே 55 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் இந்த நாளில் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் நேற்றிரவு எதிர்பாராத விதமாக பலத்த மழை கொட்டியது. நள்ளிரவு தொடங்கி இன்று காலை வரை விடிய, விடிய இடி, மின்னலுடன் கனமழை கொட்டித் தீர்த்துள்ளது.

நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், வள்ளுவர் கோட்டம், அடையாறு, திநகர், சைதாப்பேட்டை, திருவான்மியூர், கிண்டி, ராயப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் மழை வெளுத்து வாங்கியது. ஆவடி, அம்பத்தூர், மதுரவாயல் உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்ததைத் தொடர்ந்து சாலைகளில் மழை நீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர். இதனால் வெப்பம் தணிந்து சென்னை நகரம் குளிர்ச்சியாக மாறியது.

அதிகபட்சமாக மணலியில் 14 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது. அம்பத்தூர், மதுரவாயல், திருநின்றவூர் 8 செ.மீ., வளசரவாக்கம், திருவேற்காடு, செங்குன்றம் தலா 6 செ.மீ., சோழவரம் 5 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

# கவிஞர் மு.மேத்தா, பின்னணிப் பாடகி பி.சுசீலா ஆகியோருக்கு ”கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள்” - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூபாய் 10 லட்சம் ரொக்கத்துடன் கூடிய நினைவுப்பரிசு

சென்னை, 24 செப் 2024: கலைஞரின் நூற்றாண்டு நினைவினைப் போற்றிடும் வகையில் கவிஞர் மு.மேத்தா, பின்னணிப் பாடகி பி.சுசீலா ஆகியோருக்கு ”கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள்” வழங்கப்படுகிறது. இதற்கான உத்தரவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறப்பித்துள்ளார். ரூபாய் 10 லட்சம் ரொக்கத்துடன் கூடிய நினைவுப்பரிசு இது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளை இம்மாதம் 30 ந் தேதி அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கிச் சிறப்பிக்கிறார்.

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், கலைஞரின் பெயரில் “கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது” ஒவ்வொரு ஆண்டும் கலைஞரின் பிறந்த நாளான ஜூன் திங்கள் 3ம் நாளான்று வழங்கப்படும் என்றும், தேர்ந்தெடுக்கப்படும் விருதாளர்களுக்கு 10 லட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும் என்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சரால் கடந்த 2022ம் ஆண்டு சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டு அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது.

2022 ம் ஆண்டு கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது பிரபல தமிழ்ப்பட கதை வசனகர்த்தா ஆரூர் தாசுக்கு வழங்கப்பட்டது நினைவிருக்கலாம்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வழக்கமாக வழங்கப்படும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுடன், சிறப்பினமாகப் பெண்மையைப் போற்றும் வகையில் கூடுதலாக ஒரு பெண் திரைக்கலைஞருக்கும் இந்த விருதினை வழங்கிச் சிறப்பித்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 11.7.2024 அன்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவின்படி, திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் தலைமையிலான குழு கூடி, தமிழ்ப் பேராசிரியரும், புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்தவரும், சாகித்ய அகெதமி விருது பெற்றவரும், கலைஞரால் பாராட்டப்பட்டவருமான கவிஞர் மு.மேத்தாவுக்கும், திரையுலகில் 25,000க்கும் மேற்பட்ட பலமொழிப் பாடல்களைப் பாடியவரும், “தென்னிந்தியாவின் இசைக்குயில்” என்றும், “மெல்லிசை அரசி” என்றும் பாராட்டப்பட்டுள்ளவரும், கலைஞரால் பல நிகழ்வுகளில் பாராட்டப்பட்டவருமான திரைப்படப் பின்னணிப் பாடகி பி.சுசிலாவுக்கும் 2023ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கிட பரிந்துரைத்துள்ளது.

கவிஞர் முகமது மேத்தா பெரியகுளத்தில் 1945-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ம் நாள் பிறந்தவர். தமிழ் மீது தணியாத பற்று உடையவர்; சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி மாணவர்களின் அன்பைப் பெற்றவர். மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள், சிறு கதைகள், நாவல்கள், கட்டுரைகள், எனப் பல்வேறு நூல்களையும் படைத்து 70-க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதி தமது தனி முத்திரைகளைத் திறம்படப் பதித்தவர்.

அவர் எழுதிய, “ஊர்வலம்” எனும் கவிதை நூலுக்குத் தமிழ்நாடு அரசின் முதல் பரிசும், “ஆகாயத்துக்கு அடுத்த வீடு” எனும் கவிதை நூலுக்கு, "சாகித்ய அகாடமி" விருதும் பெற்ற பெருமைக்குரியவர். தம் வாழ்நாள் முழுதும் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் கவிஞர் மு.மேத்தாவைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில், ”கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது” முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் வழங்கப்படுகிறது.

கலைஞரின் நூற்றாண்டு நினைவாக, பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாக 2023ம் ஆண்டிற்கு மட்டும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள இசைக்குயில் பி.சுசீலா 1935-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13ம் நாள் ஆந்திர மாநிலம் விஜயநகரத்தில் பிறந்தவர். இசை மீது கொண்டிருந்த அதீத பற்றின் காரணமாக ஆந்திராவின் புகழ்பெற்ற இசைமேதை துவாரம் வெங்கிடசாமி நாயுடுவிடம் முறையாக இசை பயின்று 1950ம் ஆண்டு சென்னை வானொலியில் ’பாப்பா மலர்’ எனும் நிகழ்ச்சியில் பாடத் தொடங்கினார். தேனினும் இனிய தனது குரலால் அனைவரையும் கவர்ந்து, ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கும் மேலான தனது இசைப் பயணத்தில், 25,000க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளில் தொடர்ந்து பாடி சாதனைகள் படைத்தவர். இசையுலகத்தினராலும், ரசிகர்களாலும் “இசைக்குயில்” என்றும், “மெல்லிசை அரசி” என்றும், ‘கான கோகிலா” என்றும் பாராட்டப்பட்டவர் அவர். சிறந்த பின்னணிப் பாடகி எனத் தமிழ்நாடு அரசின் விருதுகளையும், ஒன்றிய அரசின் விருதுகளையும் பலமுறை பெற்றுள்ளதோடு, இந்திய மொழிகளில் அதிக எண்ணிக்கையில் பாடல்களைப் பாடியமைக்காக கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்ற பெருமைக்குரியவர். இசைக்குத் தன்னையே அர்ப்பணித்து இன்றளவும் தனித்துவமாய் விளங்கிடும் அம்மையார் பி.சுசிலாவை பெருமைப்படுத்தும் வகையில், ”கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது” வழங்கப்படுகிறது.

# பாலியல் வன்கொடுமைகள் அதிகரிப்பு; தி.மு.க. அரசை கண்டித்து சென்னையில் பா.வளர்மதி தலைமையில் மகளிர் அணி பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் ஆயிரக்கணக்கான பெண்கள் திரண்டனர்



சென்னை, 24 செப் 2024: தமிழகத்தில் தொடர்ந்து பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை கட்டுப்படுத்த தவறிய தி.மு.க. அரசை கண்டித்து இன்று சென்னையில் அண்ணா தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சரும், அண்ணா தி.மு.க. மகளிர் அணி செயலாளருமான பா.வளர்மதி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் கறுப்பு புடவை அணிந்து கண்டன முழக்க கோஷ அட்டைகளை ஏந்தி கலந்து கொண்டனர்.

பா.வளர்மதி மற்றும் நிர்வாகிகளும் கறுப்பு புடவை அணிந்து வந்திருந்தனர்.

தமிழகத்தில் 2 மணி நேரத்துக்கு ஒரு பெண் பலாத்கார செயல் நடந்து கொண்டிருக்கிறது என்று பா.வளர்மதி குற்றஞ்சாட்டினார்.

தமிழ்நாட்டில் போதை பொருள் விற்பனை புழக்கம் தாராளமாக நடைபெறுகிறது. இதனை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என சட்டசபையிலும், அறிக்கை மூலமும் எடப்பாடி பழனிசாமி தமிழக அரசை வலியுறுத்தி வந்தார்.

போதைப் பொருள் நடமாட்டத்தால் பாலியல் வன்கொடுமைகள், குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்றும் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் தொடர்ந்து அதிகரித்து வரும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை கட்டுப்படுத்த தவறிய தி.மு.க. அரசை கண்டித்து இன்று மகளிர் அணி சார்பில் சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்திருந்தார்.

பா.வளர்மதி தலைமையில் எடப்பாடி பழனிசாமியின் வேண்டுகோள்படி இன்று சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த மகளிர் அணி செயலாளர் பா.வளர்மதி பிரமாண்ட ஏற்பாடுகளை செய்திருந்தார்.

காலை முதலே வள்ளுவர் கோட்டம் அருகே பெண்கள் வந்து குவியத் தொடங்கினர். நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆட்டோக்கள், வேன்களில் கொடிகளை கட்டிக்கொண்டும், கண்டன கோஷ அட்டைகளுடனும் அங்கு வந்தார்கள். ஆர்ப்பாட்டத்துக்கு வந்த பெண்கள் ஏராளமான பேர் கறுப்பு புடவை அணிந்து வந்தார்கள்.

பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டு அதன் பின்புறம் பெரிய பேனர் வைக்கப்பட்டு பாலியல் வன்கொடுமையால் தாய்மார்கள் கதறி அழும் படம் போடப்பட்டிருந்தது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் பா.வளர்மதி பேசினார். பின்னர் அவர் கண்டன முழக்கங்களை கணீர் குரலில் படிக்க, அதனை அங்கிருந்த பெண்கள் ஆவேசமாக முழங்கினார்கள்.

கோஷங்கள் அந்த கோஷங்கள் வருமாறு: பாதுகாப்பில்லை! பாதுகாப்பில்லை! விடியா திமுக ஆட்சியிலே பெண்களுக்குப் பாதுகாப்பில்லை! சிறுமிகளுக்கும் பாதுகாப்பில்லை!

திமுக ஆட்சி என்றாலே பெற்ற பெண்களைக் காப்பாற்ற

பெற்றவர்களுக்கோ, போராட்டம்! போராட்டம்! பாதையில் பாதுகாப்பில்லை! போதையில் தமிழ்நாடு! இதுவா ஆட்சி! எல்லாமே போச்சு! கும்பி எரியுது! குடல் கருகுது! குடும்பத்தோடு அமெரிக்கச் சுற்றுலாவா? இதுவா ஆட்சி! எல்லாமே போச்சு! வாழ வழியில்லை; வயிற்றுக்குச் சோறில்லை! பாதையெல்லாம் கஞ்சா! போதையில் கணவன்! இதுவா ஆட்சி! எல்லாமே போச்சு! விடியா திமுக அரசே! விடியா திமுக அரசே! நடவடிக்கை எடு! நடவடிக்கை எடு! பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக குற்றச் செயல்களில், ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடு! சீரழியுது! சீரழியுது! விடியா திமுக ஆட்சியிலே,

பாலியல் தொந்தரவால், பெண்களின் வாழ்க்கையே சீரழியுது! கிடைக்குது! கிடைக்குது! விடியா திமுக ஆட்சியிலே, மூலை முடுக்கெல்லாம், கஞ்சா கிடைக்குது! விதவிதமாய், போதைப் பொருள் கிடைக்குது! மாறிப் போச்சு! மாறிப் போச்சு! போதைப் பொருள் மாநிலமாக, தமிழ் நாடே மாறிப்போச்சு! விடியா திமுக ஆட்சியில், முன்னணியில் நிக்குது! முன்னணியில் நிக்குது! போதைப் பொருள் புழக்கத்தில்; பாலியல் வன்கொடுமைகளில் முன்னணியில் நிக்குது! நெருங்கிவிட்டது! நெருங்கிவிட்டது! விடியா ஆட்சி, முடியும் நேரம் நெருங்கிவிட்டது! முடிவு கட்டுவோம்! முடிவு கட்டுவோம்! குடும்ப ஆட்சிக்கு, முடிவு கட்டுவோம் ! மலர வேண்டும்! மலர வேண்டும்! மக்கள் நலன் அறிந்து ஆட்சி நடத்த; பெண்குலத்தைப் பாதுகாக்க; சட்டம்-ஒழுங்கைப் பாதுகாத்திட;

கழக ஆட்சி மலர வேண்டும்! எங்கள் தங்கம், எடப்பாடியாரின் நல்லாட்சி மலர வேண்டும்

உட்பட ஏராளமான கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக வள்ளுவர் கோட்டம் பகுதியில் கடும் போக்குவரத்து நெருக்கடி, போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.கோகுல இந்திரா, மகளிர் அணி நிர்வாகிகள் கிருத்திகா முனியசாமி, நடிகை விந்தியா, நிர்மலா பெரியசாமி, சசிகலா உட்பட பலர் பேசினார்கள்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## ஹோண்டா மோட்டார் சைக்கிள் & ஸ்கூட்டர் இந்தியா புதிய சாதனை தென் பிராந்தியத்தில் 'ஆக்டிவா' விற்பனையில் 10 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள்



சென்னை, 24 செப் 2024: நாட்டின் முன்னணி இரு சக்கர வாகன உற்பத்தியாளர்களில் ஒன்றான ஹோண்டா மோட்டார் சைக்கிள் & ஸ்கூட்டர் இந்தியா (எச் எம் எஸ் ஐ) ஆனது தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா, கேரளா, ஆந்திரப் பிரதேசம், புதுச்சேரி மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் போன்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய நாட்டின் துடிப்பான தென் பிராந்தியத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் சாதனையை பெற்றிருப்பதாக இன்று அறிவித்துள்ளது. அதன்படி, எச் எம் எஸ் ஐ தென்னிந்தியாவில் 10 மில்லியனுக்கும் அதிகமான 'ஆக்டிவா' யூனிட்களை விற்பனை செய்து, நாட்டின் அனைத்து காலத்திலும் மிகவும் விரும்பப்படும் மற்றும் பிடித்த ஸ்கூட்டர் என்ற நிலையை மீண்டும் உறுதிப்படுத்தி சாதனை படைத்துள்ளது.

2001 ஆம் ஆண்டு முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஹோண்டா ஆக்டிவா ஆனது இந்திய இரு சக்கர வாகன சந்தையில் முற்றிலும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, ஆக்டிவா நம்பகத்தன்மை, புதுமை மற்றும் ஸ்டைல் ஆகியவற்றிற்கு பெயர்பெற்றது. இது நாடு முழுவதும் அதன் வெற்றியை எப்போதும் பெறுகிறது. அதன்படி, ஆக்டிவா மீதான இந்திய வாடிக்கையாளர்களின் அன்பு பல ஆண்டுகளாக தொடர்ந்து வளர்ந்து வருகிறது. தென் பிராந்தியத்தில், ஆக்டிவாவின் முதல் 5 மில்லியன் விற்பனை மைல்கல்லை 2017 இல் எட்டியது, அது அறிமுகப்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 16 ஆண்டுகளுக்குப் பிறகு, அடுத்த 5 மில்லியன் விற்பனையை வெறும் 7 ஆண்டுகளில் பெற்றது. இதுவே, அதன் பிரபலத்துக்கு சான்றாகும். இதில் 110சிசி மற்றும் 125சிசி மாடல்கள் உட்பட முழு ஆக்டிவா குடும்பத்தின் விற்பனையும் அடங்கும்.

தென்னிந்தியா முழுவதும் 1,700க்கும் மேற்பட்ட டச் பாயின்ட்களைக் கொண்ட எச் எம் எஸ் ஐ இன் வலுவான விற்பனை மற்றும் சர்வீஸ் நெட்வொர்க் ஆனது பிராந்தியத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஆக்டிவாவைப் பெறுவதிலும், சவாரி செய்வதிலும், சர்வீஸ் செயல்பாட்டிலும் நம்பகமான ஒன்றாக இருக்கிறது. இந்த 10 மில்லியன் விற்பனை மைல்கல், டீலர் பார்ட்னர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவுடன் எச் எம் எஸ் ஐ இன் வாடிக்கையாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கு ஒரு சான்றாகும்.

பெருமைக்குரிய தருணத்தில் ஹோண்டா மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் இந்தியாவின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் இயக்குனர் திரு. யோகேஷ் மாத்தூர் பேசுகையில், "தெற்கு பிராந்தியத்தில் 10 மில்லியன் ஆக்டிவா விற்பனையை எட்டியிருப்பது எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கு ஒரு சான்றாகும். தொடர்ந்து புதுமைகளை உருவாக்குவதற்கும் விதிவிலக்கான மதிப்பை வழங்குவதற்கும் எங்களின் இடைவிடாத முயற்சிகளை இது பிரதிபலிக்கிறது. எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் டீலர் பார்ட்னர்களின் ஆதரவுக்காக நாங்கள் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம், மேலும் வரும் ஆண்டுகளில் சிறந்ததை வழங்க உறுதிபூண்டுள்ளோம்" என்றார்.

## டான்டெக் டிஜிட்டல் டென்டல் சொல்யூஷன்ஸ் பிரபல முதலீட்டாளர்கள் குழுவிடமிருந்து ரூ.21 கோடி ($2.5 மில்லியன்) தொகையை நிதி ஆதரவை பெற்றுள்ளது



சென்னை, 24 செப் 2024: முன்னனி டென்டல் புரோஸ்தெடிக் உற்பத்தியாளரான டான்டெக் டிஜிட்டல் டென்டல் சொல்யூஷன்ஸ் வெற்றிகரமாக ரூ.21 கோடி ($2.5 மில்லியன்) -ஐ மதிப்பிற்குரிய முதலீட்டாளர்களின் ஒரு குழுவிடமிருந்து நிதி ஆதரவாக பெற்றுள்ளது. இந்த முதலீட்டு சுற்றில் குணவத் வைத், யூனிகார்னஸ் மேக்சிமஸ், ஷுகுன் கேபிட்டல் வென்ச்சர்ஸ், வாவ் இன்வெஸ்ட்மென்ட்ஸ், டென் எய்ட்டி இன்வெஸ்ட்மென்ட்ஸ், டேப்லெட்ஸ் ஆஃப் இந்தியாவின் குடும்ப முதலீட்டாளர் கள் மற்றும் புகழ்பெற்ற பல்மருத்துவர்களின் கூட்டமைப்பு ஆகியோரின் பங்களிப்புகள் அடங்கும்.

இந்த தற்போதைய மூலதன ஊட்டமானது டான்டெக்கின் இலட்சியமிக்க வளர்ச்சி திட்டங்களுக்கு கிரியாவூக்கியாக செயல்பட்டு நிறுவனம் அதன் உள்நாட்டு உற்பத்தி கொள்திறனை அதிகரிக்கவும் தனது தயாரிப்புகளின் வரைவை விரிவாக்கம் செய்யவும் முக்கியமான சர்வதேச சந்தைகளின் காலடி பதிக்கவும் உதவும். வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவில் வலுவான காலடி தடத்தை பதித்துள்ள டான்டெக் டென்டல் தொழில்நுட்ப தொழில்துறையில் உலக அளவில் ஒரு முன்னனி நிறுவனமாக உயரும் திறனை படைத்துள்ளது.

தனிப்பயனாக்கப்பட்ட டென்டல் புரோஸ்தெட்டிக்ஸ் துறையில் பல தசாப்தங்கள் அனுபவம் வாய்ந்த பல்மருத்துவரான டாக்டர் சிவசங்கர் மகாதேவன் மற்றும் டென்டல் வர்த்தகத்தில் மூன்றாம் தலைமுறை சுய தொழில் முனைபவரான வருண் குணசீலன் ஆகியோரால் தொடங்கப்பட்ட டான்டெக் ஆனது அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் இந்த தொழில்துறையில் ஆழமான புரிதல் ஆகியவற்றின் துணையுடன் உயர்தரமிக்க ஆக்கப்புத்தாக்க டென்டல் தீர்வுகளை உற்பத்தி செய்கிறது.

"எங்கள் பயணம் மிக சிறந்த பல் சிகிச்சையை வழங்க வேண்டும் என்ற எங்கள் தாத்தாவின் (டாக்டர் பி.பி. ராஜன்) தொய்வடையாத அர்பணிப்பினால் உந்தப்பட்டு டென்டல் தொழில்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் தொடங்கியது," என்று டான்டெக்-ன் சீஇஓ & எம்டி வருண் குணசீலன் கூறினார். "இந்த புதிய நிதி ஆதரவால் எங்கள் வளர்ச்சியை பெரியளவில் அதிகரித்து எங்கள் ஆக்கப்புத்தாக்க தயாரிப்புகளை உலகளாவிய பல்மருத்துவர்களுக்கு கொண்டு சேர்ப்பதில் உவகை கொள்கிறோம்."

உயர்தரமிக்க தொழில்நுட்ப ஆற்றல் பெற்ற மருத்துவ கருவிகளை உருவாக்கி தயாரிக்கும் டான்டெக்-ன் யுக்திபூர்வ முனைப்பானது இந்தியாவின் ஆக்கமுயற்சியான "மேக் இன் இந்தியா" உடன் நேர்த்தியாக பொருந்துகிறது. தன் தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் குறைந்த செலவு கட்டமைப்பு ஆகியவற்றின் துணையுடன் இந்நிறுவனமானது சர்வதேச நிறுவனங்களுக்கு சவால் விடவும் டென்டல் பொருட்களின் உள்நாட்டு தயாரிப்பை ஊக்கப்படுத்தவும் இலக்கு கொண்டுள்ளது.

"தரம், ஆக்கப்புத்தாக்கம், மற்றும் பல்மருத்துவர்களை மையமாக கொண்ட பராமரிப்பு ஆகியவற்றின் மீதான டான்டெக்கின் அர்ப்பணிப்பு இந்நிறுவனத்தை தனித்தன்மையுடன் விளங்க செய்கிறது," என்று நிறுவன போர்டின் தலைவர் டாக்டர் குணசீலன் ராஜன் கூறுகிறார். "இந்த முதலீடு நாங்கள் புதிய உச்சங்களுக்கு எங்களை உந்தி செலுத்தி தொடவும் டென்டல் தொழில்நுட்ப சந்தையில் முன்னனி வகிக்கும் நிறுவனம் என்ற நிலையை உறுதிபடுத்தவும் உதவும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம்."

## எஃப்எல்பி எம் ஜி அம்பத்தூர் எம்ஜி விண்ட்சர், இந்தியாவின் முதல் நுண்ணறிவு சி யூ வி ஐ வெளியிட்டது



சென்னை, 24 செப் 2024: ஜேஎஸ்டபுள்யு எம்ஜி மோட்டார் இந்தியா, அது சமீபத்தில் அறிமுகம் செய்த எம்ஜி விண்ட்ஸர் காரின் விலைகளை இன்று அறிவித்திருக்கிறது. ரூ. 13,49,800 என்ற தொடக்க விலையில் வெளிவரும் இந்தியாவின் முதல் இன்டலிஜென்ட் சி யூ வி, ஒரு செடானின் வசதியையும் மற்றும் ஒரு எஸ் யூ வி-ன் இடவசதியையும் ஒருங்கிணைத்து வாடிக்கையாளர்களுக்கு சொகுசான பிசினஸ் அனுபவத்தை வழங்குகிறது.

எதிர்காலத்திற்குரிய ஏரோடைனமிக் வடிவமைப்பு தாராள இடவசதி கொண்ட ஆடம்பரமான உட்புற அம்சங்கள், உத்தரவாதத்துடன் கூடிய பாதுகாப்பு, ஸ்மார்ட் இணைப்பு வசதி, டிரைவிங் சௌகரியம் மற்றும் பல உயர்தொழில்நுட்ப அம்சங்களுடன் இந்த சி யூ வி வெளிவருகிறது. கூடுதலாக, முதல் உரிமையாளருக்கு பேட்டரி மீது வாழ்நாள் கால வாரண்ட்டி மூன்றாண்டுகளுக்கு பிறகு 60% விலைக்கு திரும்ப வாங்கிக் கொள்ளும் உத்தரவாதம் மற்றும் எம்ஜி செயலியால் இ ஹப்-ஐ பயன்படுத்தி பொது சார்ஜர்களில் ஓராண்டு இலவச சார்ஜிங் வசதி போன்ற பல்வேறு முன்னெடுப்புகள் வழியாக முழுமையான மனநிம்மதிக்கான உத்தரவாதத்தையும் வாடிக்கையாளர்கள் பெறுகின்றனர். கீழ்வரும் நான்கு வண்ண விருப்பத்தேர்வுகளில் விண்ட்ஸர் கிடைக்கிறது: ஸ்டார்பர்ஸ்ட் பிளாக், பேர்ல் ஒயிட், க்ளே பெய்ஜ், மற்றும் டர்க்கைஸ் கிரீன்.

இந்த இன்டலிஜென்ட் சி யூ வி, எதிர்காலத்திற்குரிய மற்றும் பாரம்பரியமான, விரிவாக்கல் என்ற கருத்தாக்கத்தை கடந்து செல்கின்ற ஒரு ஏரோகிளைடு டிசைன் வடிவமைப்பைக் கொண்டிருக்கிறது. இதன் உட்புற அலங்காரங்கள் ஆடம்பரத்தையும், சொகுசு வசதியையும் பிரதிபலிக்கின்றன. இதன் விசாலமான ஏரோ லவுஞ்ச் இருக்கைகளை 1350 வரை சாய்த்துக்கொள்ள முடியும். இதன் விரிவான இன்ஃபினிட்டிவ் வியூ கிளாஸ் ரூஃப் இதன் பிசினஸ் கிளாஸ் அனுபவத்தை மேலும் சிறப்பாக்குகிறது. இதன் நேர்த்தியான பொழுதுபோக்கு மற்றும் ஸ்மார்ட் இணைப்பு அம்சங்கள், மத்திய கன்சோல் - ல் உள்ள மிகப்பெரிய 15.6" கிராண்டுவியூ டச் டிஸ்பிளே வழியாக ஆற்றலுடன் செயல்படுகின்றன. எம்ஜி விண்ட்ஸர், 100கிவா (136பி எஸ்) என்ற சிறப்பான ஆற்றல் மற்றும் 200என் எம் டார்க்-ஐ வழங்கும் ஐ பி67 சான்றிதழ் பெற்ற ஒரு 38கி வாஎச் லி-அயன் பேட்டரி பேக்குடன் வெளிவருகிறது. ஒற்றை சார்ஜில் 332 கிமீ ஏ ஆர் ஏ ஐ சான்றிதழ் பெற்ற பயண தூர திறனை கொண்ட இந்த மின்வாகனம் நான்கு டிரைவிங் மோடுகளை (எக்கோ+, எக்கோ, நார்மல் மற்றும் ஸ்போர்ட்) கொண்டிருக்கிறது.

## சாம்சங் இந்தியாவின் ஏ ஐ-இயங்கும் 'பிக் டிவி ஃபெஸ்டிவல்' இந்த பண்டிகை சீசனைக் காட்டிலும் பெரிதாகிறது; அதன் பிரீமியம் ஏ ஐ டி வி வரம்பில் சிறந்த சலுகைகளைப் பெறுங்கள் மற்றும் வெல்ல முடியாத சலுகைகளை அனுபவிக்கவும்




கோயம்புத்தூர், 24 செப் 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் 'பிக் டிவி ஃபெஸ்டிவல்' விளம்பரத்தின் மூலம் இந்த பண்டிகை காலத்தை மிகவும் மகிழ்ச்சிகரமானதாக மாற்ற உள்ளது. நியோ கியூஎல்ஈடி 8கே, நியோ கியூஎல்ஈடி 4கே, ஓஎல்ஈடி மற்றும் கிரிஸ்டல் 4கே யூஎச்டி டிவிகள் போன்ற பிரீமியம் ஏ ஐ-இயங்கும் பெரிய திரை தொலைக்காட்சிகளில் இணையற்ற சலுகைகளை வழங்குகிறது, குறிப்பிட்ட கால சலுகைகள் செப்டம்பர் 14 முதல் நவம்பர் 10, 2024 வரை இயங்கும், அற்புதமான இலவசங்கள், 3 கேஷ்பேக் ஆகியவற்றை வழங்குகிறது. ஆண்டு உத்தரவாதம் மற்றும் சிறப்பு ஈ எம் ஐ சலுகைகள்.

சாம்சங் பிக் டிவி ஃபெஸ்டிவல், ஏ ஐ-இயக்கப்பட்ட அம்சங்களுடன் காட்சி அமிர்ஷன் மற்றும் ஒலி தரத்தில் புதிய தரத்தை அமைக்க உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களில் நியோ கியூஎல்ஈடி, ஓஎல்ஈடி மற்றும் கிரிஸ்டல் 4கே யூஎச்டி டி வி வரம்பில் சலுகைகள் கிடைக்கின்றன.

வாடிக்கையாளர்கள் ரூ. 290000 மதிப்புள்ள இலவச சாம்சங் டிவி மாடல்களையும், தேர்ந்தெடுக்கப்பட்ட வாங்குதல்களுடன் ரூ. 100000 மதிப்புள்ள இலவச சவுண்ட் பார்களையும் பெறலாம். சாம்சங் தனது அல்ட்ரா-பிரீமியம் பிக் டிவிகளில் 20% வரை தவிர்க்க முடியாத கேஷ்பேக்குகள், 3 ஆண்டு விரிவான உத்தரவாதம் மற்றும் எளிதான ஈ எம் ஐகள் ரூ. 2777 இல் தொடங்கி 36 மாதங்கள் வரை நீண்ட கால ஈ எம் ஐ உடன் வழங்குகிறது. இந்த கவர்ச்சிகரமான ஒப்பந்தங்கள் ஷிணீனீஉஙூஸீரீ.நீஷீனீ முழுவதும் கிடைக்கும், மேலும் இந்தியா முழுவதும் உள்ள சாம்சங் சில்லறை விற்பனை நிலையங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

நிகரற்ற படம் மற்றும் ஒலியின் புதிய சகாப்தத்தை உருவாக்கி, சாம்சங் வழங்கும் இந்த சலுகைகள் ஏ ஐ தொழில்நுட்பத்தை ஜனநாயகப்படுத்துவதையும் அதன் சமீபத்திய பிரிமியம் டிவிகளை நுகர்வோருக்கு அணுகக்கூடியதாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏ ஐ அப்ஸ்கேலிங் மற்றும் ஏ ஐ ஆப்டிமைசேஷன் மூலம் இயங்கும் அதன் சொந்த திரை வகுப்பு, இந்த பிரீமியம் ஏ ஐ டிவிகள் நுகர்வோரின் உள்ளடக்கத்திற்கு உயிர் கொடுக்கின்றன. கியூ-சிம்பொனி & டால்பி அட்மாஸ் மூலம் ஒவ்வொரு காட்சியின் செயலிலும் தப்பிப்பதை முன்னெப்போதையும் விட எளிதாக்கும் வகையில், திரையின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பல பரிமாண ஒலிகள் இயக்கப்பட்டு, பார்க்கும் அனுபவத்தை ஒரு திரைப்பட அரங்கிற்கு உயர்த்துகிறது. கூடுதலாக, பயனரின் தனியுரிமையை பூட்டு மற்றும் விசையின் கீழ் வைத்திருப்பது, சாம்சங் நாக்ஸ் பாதுகாப்பு, அங்கீகரிக்கப்படாத செயல்பாட்டிலிருந்து டிவியையும் அதனுடன் இணைக்கப்பட்ட சாதனங்களையும் பாதுகாக்கிறது. "இன்று, நவீன இந்திய குடும்பங்களில், தொலைக்காட்சிகள் வாழ்க்கை இடங்களின் மையப் பகுதிகளாகக் காணப்படுகின்றன, அவை தொழில்நுட்பத்தையும் வாழ்க்கை முறையையும் தடையின்றி ஒருங்கிணைக்கின்றன. இந்தியாவில் பெரிய திரை அளவுகளுக்கான தேவை அதிகரித்து வருவதோடு, வாடிக்கையாளர்களுக்கு பிரீமியம் ஏ ஐ அனுபவத்தை ஜனநாயகப்படுத்தவும், சாம்சங் பிக் டி வி விழாவை மீண்டும் கொண்டு வருவதில் பெருமிதம் கொள்கிறோம். ஏ ஐ-இயக்கப்பட்ட அம்சங்களுடன் காட்சி அமிர்ஷன் மற்றும் ஒலி தரத்தில் ஒரு புதிய தரத்தை அமைக்க வடிவமைக்கப்பட்டுள்ளது, இந்த தொலைக்காட்சிகள் சாம்சங் நாக்ஸால் இயக்கப்பட்ட முழுமையான பாதுகாப்பை வழங்கும் அதே வேளையில் ஸ்டைல் அளவை பல புள்ளிகளை உயர்த்துகின்றன. பிக் டிவி திருவிழா, சாம்சங் ஏ ஐ டி வி வரம்பில் வழங்கப்படும் இறுதி சினிமா அனுபவத்திற்கு மேம்படுத்துவதன் மூலம், பண்டிகைக் காலத்துக்கு முன்னதாக, உயர்ந்த வீட்டு பொழுதுபோக்கு அமைப்பின் எதிர்காலத்தைத் தழுவுவதற்கு நுகர்வோரை உற்சாகப்படுத்துகிறது" என்று சாம்சங் இந்தியாவின் விஷுவல் டிஸ்ப்ளே வணிகத்தின் மூத்த இயக்குநர் விப்லேஷ் டாங் கூறினார்.

# தென்னிந்தியா எம் எஸ் எம் ஈக்களுக்கான புதுமையான கண்டுபிடிப்பு மற்றும் வளர்ச்சியின் முன்னோடிகளான விளங்கும் யெஸ் வங்கி

சென்னை, 24 செப் 2024: இந்தியாவின் ஆறாவது பெரிய தனியார் துறை வங்கியான யெஸ் பேங்க் (யெஸ் வங்கி) ஆனது, தென்னிந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (எம் எஸ் எம் ஈ) துறை வளர்ச்சி மற்றும் புதுமைகளை செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலங்களில் எம் எஸ் எம் ஈகள், குறிப்பாக தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில், 5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நோக்கிய இந்தியாவின் பொருளாதார முயற்சியில் முன்னணியில் உள்ளது. அதோடு, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 21.74 லட்சத்திற்கும் அதிகமான எம் எஸ் எம் ஈகள் உள்ளன, அதே நேரத்தில் கர்நாடகாவில் உள்ள பெங்களூரு தொழில்நுட்பம் சார்ந்த வணிகங்களுக்கான உலகளாவிய மையமாகத் தொடர்கிறது மற்றும் கேரளாவின் எம் எஸ் எம் ஈ கள் சேவை மற்றும் உற்பத்தித் துறைகளில் செழித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் எம் எஸ் எம் ஈ துறையானது 2030 ஆம் ஆண்டுக்குள் 8.5% சி ஏ ஜி ஆர் ஐத் தாண்டி வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னிந்தியா எம் எஸ் எம் ஈ களின் வளர்ச்சிக்காக புதுமைகளை வளர்ப்பதில் யெஸ் வங்கியின் அர்ப்பணிப்பு அளப்பரியது. ஏனெனில், நிறுவனத்தின் விரிவான டிஜிட்டல் வங்கி தீர்வுகளில் அது பிரதிபலிக்கிறது. அதன் முக்கிய கருப்பொருளாக யெஸ் எம் எஸ் எம் ஈ எனும் ஆன்லைன் பிளாட்ஃபார்ம் உள்ளது. இது எம் எஸ் எம் ஈ களுக்கு செயல்பாட்டு மூலதன கடன்கள், வர்த்தக நிதி தீர்வுகள் மற்றும் இடர் மேலாண்மை கருவிகளை எளிதாக்குவதற்கான ப்ரத்யேக செயல்பாடாகும். உலகளாவிய வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள எம் எஸ் எம் ஈ களுக்கு இந்த தளம் முக்கியமானது. ஏனெனில் ஏற்றுமதி நிதியுதவியை தடையின்றி அணுகவும், நாணய அபாயங்களைக் குறைக்கவும் மற்றும் சர்வதேச பரிவர்த்தனைகளை நிர்வகிக்கவும் உதவுகிறது.

ஐடி மற்றும் உற்பத்தி தொழில் போன்ற தொழிற்துறைகளில் தென்னிந்தியாவின் தலைமைத்துவத்தை அங்கீகரித்து, யெஸ் வங்கி இந்த வணிகங்கள் உலகளவில் போட்டித்தன்மையுடன் இருக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட நிதி தயாரிப்புகளை வழங்குகிறது. முக்கிய உலகளாவிய தொழில்நுட்ப மையங்களாக அங்கீகரிக்கப்பட்ட பெங்களூரு மற்றும் சென்னை போன்ற நகரங்களில், எம் எஸ் எம் ஈகளுக்கு யெஸ் வங்கியனது மூலதன தீர்வுகள், விற்பனையாளர் நிதி மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான கடன்கள் ஆகியற்றை வழங்குகிறது. இதன் மூலம், செக்லேலிங் செயல்பாடுகள் மற்றும் விநியோகச் சங்கிலியின் சிக்கலை நிர்வகித்தல் போன்ற துறை சார்ந்த சவால்களை எதிர்கொள்ளும் அதே வேளையில், எம் எஸ் எம் ஈகள் புதுமையின் பிரதிபலிப்பில் இருக்க என்றென்றும் அனுமதிக்கிறது.

மேலும், யெஸ் வங்கி தென்னிந்திய மாநிலங்களின் பன்முக தேவையை புரிந்துகொள்கிறது. உதாரணமாக, ஜவுளி மற்றும் ஆட்டோமொபைல் உள்ளிட்ட தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை சார்ந்த கட்டமைக்கப்பட்ட நிதித் தயாரிப்புகளில் வளர்ச்சிதேவைப்படுகிறது. சேவைகள் மற்றும் உற்பத்தியில் வேரூன்றிய கேரளாவின் எம் எஸ் எம் ஈ-களுக்கு, உலகளாவிய வர்த்தகத்தின் சிக்கல்களை வழிநடத்துவதை உறுதிசெய்யும் தனிப்பயனாக்கப்பட்ட இடர் மேலாண்மை சேவைகள் தேவைப்படுகின்றன. அதுபோல, யெஸ் வங்கியின் அந்நியச் செலாவணிச் சேவைகள் மற்றும் இணையப் பாதுகாப்புத் தீர்வுகள் ஆகியவை உலகளாவிய சந்தைகளுடன் தொடர்புடைய அபாயங்களை நிர்வகிக்க மேற்கண்ட நிறுவனங்களுக்கு உதவுவதில் முக்கியமானவை.

நிலைத்தன்மையில் உலகளாவிய கவனம் செலுத்தும் வகையில், தென்னிந்தியாவின் எம் எஸ் எம் ஈக்களுக்கான பசுமை நிதியளிப்பில் யெஸ் வங்கி முன்னோடியாக இருந்து வருகிறது. சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வுகளை கடைப்பிடிப்பதில் வணிகங்களை வங்கி ஆதரிக்கிறது, மேலும் தொழில்கள் முழுவதும் சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகளை ஊக்குவிக்கிறது. கழிவு மேலாண்மை, ஆற்றல் திறன் மற்றும் நிலையான உற்பத்தி நடைமுறைகளுக்கு கடன்களை வழங்குவதன் மூலம், எம் எஸ் எம் ஈ கள் வளர்ச்சியடைவது மட்டுமல்லாமல், பசுமையான எதிர்காலத்தை நோக்கி இந்தியாவையும் வழிநடத்துகிறது.

யெஸ் வங்கியின் செயல் இயக்குநர் திரு. ராஜன் பென்டல், எம் எஸ் எம் ஈ கடன் இடைவெளியைக் குறைப்பதில் வங்கியின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார்: அவர் கூறுகையில், "எம்எஸ்எம்இகள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 30% மற்றும் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 50% பங்களிக்கின்றன, இருப்பினும் $33 டிரில்லியன் கடன் இடைவெளியை எதிர்கொள்கின்றன. யெஸ் வங்கி ஆனது, எங்கள் எம் எஸ் எம் ஈ செல் போன்ற முயற்சிகள் மூலம் அவர்களின் வளர்ச்சிக்கு ஒரு ஊக்கியாக இருக்க உறுதிபூண்டுள்ளது, இது வணிகங்கள் அரசாங்க திட்டங்களை அணுகுவதற்கும், வடிவமைக்கப்பட்ட நிதி தீர்வுகளுக்கும் உதவுகிறது. எங்களின் டிஜிட்டல் சப்ளை செயின் ஃபைனான்சிங் பிளாட்ஃபார்ம், ஸ்மார்ட்ஃபின், நிகழ்நேர தரவு மற்றும் நுண்ணறிவுகளை வழங்குகிறது, இது எம் எஸ் எம் ஈ கள் தகவலறிந்த நிதி முடிவுகளை எடுக்க உதவுகிறது. மேலும், எங்கள் யெஸ் கிரன் திட்டத்தின் மூலம், எம் எஸ் எம் ஈகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தீர்வுகளை பின்பற்றவும், நீண்ட கால செலவுகளை குறைக்கவும் மற்றும் நிலைத்தன்மையை இயக்கவும் உதவுகிறோம். ஏஐ மற்றும் ஆட்டோமேஷன் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்து வருவதால், எம் எஸ் எம் ஈ களை புதிய உயரங்களை எட்டுவதற்கும், இந்தியாவின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் அதிகாரம் அளிப்பதே எங்கள் குறிக்கோள்." என்றார். புதுமை, டிஜிட்டல் மாற்றம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் யெஸ் வங்கியின் கவனம் தென்னிந்தியாவின் எம் எஸ் எம் ஈ துறையின் எதிர்காலத்தில் முக்கிய பங்குதாரராக நிலைநிறுத்துகிறது. இந்த பிராந்தியத்தில் எம் எஸ் எம் ஈ சுற்றுச்சூழல் அமைப்பு உருவாகி வருவதால், யெஸ் வங்கி தனது பங்கை விரிவுபடுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளது, புதிய டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் பசுமை நிதியளிப்பு தயாரிப்புகளை வழங்குவதன் மூலம் வணிகங்கள் பொறுப்புடனும் நிலையானதாகவும் வளர உதவுகிறது. பிராந்தியத்தின் தனித்துவமான பொருளாதார நிலப்பரப்பைப் பற்றிய ஆழமான புரிதலுடன், தென்னிந்தியாவின் எம் எஸ் எம் ஈ களை உலக அரங்கில் இன்னும் பெரிய உயரத்திற்கு கொண்டு செல்ல யெஸ் வங்கி தயாராக உள்ளது.

# ‘கூகுள் மேப்’பால் விபரீதம்: கார் ஆற்றில் கவிழ்ந்து 2 பேர் பலி

சென்னை, 24 செப் 2024: கூகுள் மேப்பை பார்த்தபடி காரை ஓட்டியதால், கார் ஆற்றில் கவிழ்ந்து 2 பேர் பலியாகி உள்ளனர்.

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் அருகே 2 பேர் கூகுள் மேப் உதவியுடன் காரில் சென்று கொண்டிருந்தனர். கூகுள் மேப்பை பார்த்தப்படி காரை ஓட்டியதால் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையின் அருகே இருந்த ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் மூச்சு திணறி காரில் இருந்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் பற்றி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் பொதுமக்கள் உதவியுடன் காரில் இருந்த உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உயிரிழந்த இருவரும் மராட்டிய மாநிலம் தானே பகுதியை சேர்ந்தவர்கள் என போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சம்பவம் பற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# எவெக்ஸியா லைஃப்கேர் லிமிடெட்-ன் மாற்றத்தக்க வாரண்ட்களின் முன்னுரிமை வெளியீடு வழியாக நிதிதிரட்டும் திட்டத்திற்கு ஒப்புதல்

சென்னை, 22 செப் 2024: உயர்தர ஸ்டிரெட்ச் டெனிம் துணியை தயாரித்து வழங்கும் முன்னணி நிறுவனமான விஷால் ஃபேப்ரிக்ஸ் லிமிடெட், ரூ. 153 கோடி என்ற மொத்த தொகைக்கு புரொமோட்டர் அல்லாத வகையினத்தைச் சேர்ந்த நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் ஒரு வாரண்டுக்கு ரூ. 30.60 என்ற தள விலையில் கட்டாயமாக மாற்றக்கூடிய வாரண்ட்டுகளை தனது இயக்குநர்கள் குழு ஒதுக்கீடு செய்திருப்பதை அறிவித்திருக்கிறது. நார்த் ஸ்டார் ஆப்பர்சூனிட்டிஸ் ஃபண்டு, விசிசி புல் வேல்யு இன்கார்பரேட்டட் விசிசி சப்-ஃபண்டு, எமினென்ஸ் குளோபல் ஃபண்டு பிசிசி - யுபிலியா கேபிடல் பார்ட்னர்ஸ் ஃபண்டு போன்ற எஃப்பிஐ நிறுவனங்கள் மற்றும் எலிசியன் வெல்த் ஃபண்டு (முன்பு சில்வர் ஸ்டாலியன் லிமிடெட்) & விகாசா இந்தியா இஐஎஃப் ஐ ஃபண்டு போன்ற பிற பொது வகையின நிறுவனங்களுக்கு இந்த வாரண்ட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. மேலும், ரூ. 100 கோடி என்ற ஒட்டுமொத்த தொகை வரை ஒப்புதலளிக்கப்பட்ட தகுதிவாய்ந்த நிறுவனங்கள் பிளேஸ்மெண்ட் திட்டத்திற்கும் இயக்குநர்கள் குழு ஒப்புதலளித்திருக்கிறது. ஒரு அல்லது இரண்டு கட்டங்களாக திரட்டப்படும் இந்த நிதி திட்டம், நிறுவனத்தின் பங்குதாரர்களது ஒப்புதல் மற்றும் பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை அதிகாரி அமைப்புகளின் அனுமதி கிடைக்கப்பெறுவதற்கு உட்பட்டதாகும். 2024 ஜுன் 30 முடிவடைந்த முதல் காலாண்டின்போது சிறப்பான வருவாய் ஈட்டப்பட்டிருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருந்தது. இயக்க செயல்பாடுகளிலிருந்து ரூ. 33991.60 இலட்சம் என்ற வருவாய் கிடைத்திருந்தது. நிதியாண்டு 24-ன் முதல் காலாண்டில் ரூ. 2080.93 இலட்சமாக இருந்த எபிட்டா 28% வளர்ச்சியுடன் கியூ1எஃப்ஒய்25-ல் ரூ. 2668.71 இலட்சமாக முன்னேற்றம் கண்டிருக்கிறது. அதுபோலவே அதே காலஅளவு ஒப்பீட்டில் வரிக்குப் பிந்தைய இலாபமும் ரூ. 231.86 இலட்சத்திலிருந்து ரூ. 477.83 இலட்சமாக 106% வளர்ச்சியினை பதிவுசெய்திருந்தது.

முன்னதாக, ரூ. 158.02 கோடி என்ற மொத்த தொகைக்கு 2024 மார்ச் 30 அன்று சிரிபால் டெக்ஸ்டைல் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்-ல் 37.72 சதவீத பங்கினை விஷால் ஃபேப்ரிக்ஸ் வாங்கியிருந்தது (ஒரு பங்கிற்கு ரூ. 135 என்ற விலையில் 1,170,500 பங்குகள்). இந்த கையகப்படுத்தல் நடவடிக்கையானது விஷால் பேப்ரிக்ஸ்-ன் ஒரு இணை நிறுவனமாக சிரிபால் டெக்ஸ்டைல் மில்ஸ்-ஐ மாற்றியிருக்கிறது. 2023 மார்ச் 31-ல் முடிவடைந்த நிதியாண்டில் ரூ. 539.03 கோடி என்ற விற்றுமுதலுடன் பல்வேறு நூல்கள் மற்றும் ஆடைகளின் உற்பத்தியாளர் மற்றும் வர்த்தக நிறுவனமாக சிரிபால் டெக்ஸ்டைல் மில்ஸ் இயங்கி வருகிறது.

# பத்து ஆண்டுககளாக மாபெரும் கடற்கரை தூய்மை பணியை செய்து வரும் கம்யூனிட்டி ட்ரீ என் ஜி ஓ



சென்னை, 24 செப் 2024: நம்ம சென்னை கடற்கரையில் அசுத்தம் செய்யும் நம்ம சென்னை வாசிகள் கடற்கரையை பார்க்க வருபவர்கள் எல்லா விதமான உணவு பொருட்களை சாப்பிட்டு அதே இடத்தில் போட்டு விடுகிறார்கள். அந்த மாதிரி பிளாஸ்டிக் பை போடுவதால் மண்ணில் மக்காமல் அப்படியே பூமியில் தங்கி விடுவதால் மாசிப்பெற்று பொலிவிஷன் ஏற்பட்டு புதிய விதமான நோய்கள் வரக்காரணமாகும். இதை தவிர்க்க இந்த பணியை பத்து ஆண்டுகள் தொடர்ந்து செய்து வருகிறது.

கம்யூனிட்டி ட்ரீ என்ற என் ஜி ஓ இண்டர்நேஷனல் கோஸ்டல் க்ளீனப் டே என்ற பெயரில் மாபெரும் கடற்கரை தூய்மை பணியை செய்து வருகிறோம். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இங்கு நிகழ்வு மேலும் வலுப்பெற்று 22,000 தன்னார்வலர்கள், கல்லூரி, பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் ஆகியவை கைகோர்த்துள்ளனர். மேலும் இவர்களை ஊக்குவிக்கும் வகையில் கார்ப்பரேஷன் கமிஷனர் குமரகுருபரன் வருகை புரிந்து அனைவருடன் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

# உதயநிதிக்கு துணை முதல்வர் வழங்கப்படுவது உறுதியா? அமைச்சரவையில் மாற்றம் இருக்கும்; ஏமாற்றம் இருக்காது - முதல்வர் ஸ்டாலின்



சென்னை, 24 செப் 2024: உதயநிதிக்கு துணை முதல்வர் வழங்கப்படுவது தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், “அமைச்சரவையில் மாற்றம் இருக்கும்; ஏமாற்றம் இருக்காது” என்று தெரிவித்துள்ளார்.

சென்னை கொளத்தூரில் இன்று பல்வேறு நலத்திட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவரிடம் அமைச்சரவை மாற்றம் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த முதல்வர், “அமைச்சரவையில் மாற்றம் இருக்கும் ஏமாற்றம் இருக்காது” என்று தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் வெள்ளை அறிக்கை கோருவது பற்றி முதல்வரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு முதல்வர் ஸ்டாலின், “வெளிநாட்டு முதலீடுகள் குறித்து தொழில்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா ஏற்கெனவே தெளிவாக விளக்கம் கொடுத்துள்ளார். அதுவே வெள்ளை அறிக்கைதான். வெளிநாட்டு முதலீடுகள் ஏதும் ஏமாற்றும் திட்டங்கள் அல்ல. அண்ணா தி.மு.க. ஆட்சியில் வெள்ளை அறிக்கைகள் எப்படி இருந்தன என்று அனைவரும் தெரியும். அண்ணா தி.மு.க.வை போல் நாங்கள் ஏமாற்றும் நிதி முதலீடுகளை பெறவில்லை என்றார்.

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது. 2 நாட்களில் மாவட்ட கலெக்டர்களுடன் பேச உள்ளேன். கொளத்தூர் எனது சொந்த தொகுதி. நினைத்த நேரத்தில் இங்கு வருவேன் என்றும் ஸ்டாலின் கூறினார்.

நீண்ட நாட்களாக அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட உள்ளதாக தகவல் பரவிவரும் நிலையில் மாற்றம் இருக்கும் என ஸ்டாலின் தெரிவித்திருப்பது தொண்டர்கள் இடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.